R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
September 2021





'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'
ஆகஸ்ட் மாதம் 30-வது ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது
அதன் நினைவாக 'மகிழ்ந்து களிகூரு' என்ற
சகோதரிகளுக்கான புத்தகம் வெளியிடப்பட்டது
கலந்து கொண்ட எமது சகோதர சகோதரிகள்
இடம்: செங்கல்பட்டு கிறிஸ்துவின் சபையார் கூடும் வளாகம்

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



love God
love people
be a servant

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 | செப்டம்பர் 2021 | கனி 10




MONTHLY | THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39


பாடம் : 22
தலைப்பு : பயப்படாதே - Fear Not
வேத வாசிப்பு : ஏசாயா 41:8-16

1. கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ பயப்படாதே - ஆதி.15:1
2. மோசே: பயப்படாதிருங்கள் என்றார் - யாத்.14:13
3. தாவீது சாலொமோனை நோக்கி - 1நாளா.28:20

குடும்பமாக கர்த்தருடைய பணியைச் செய்ய ஒப்புக்கொடுக்கப் பட்டவர்கள் தேவை 6379350509

*உன் இருதயம் நட்பை நாடும்போது தேவனோடு நட*
*நீ யாரோ ஒருவரை சார்ந்துகொள்ள நாடும்போது தேவனிடத்திற்கு திரும்பு*
*நீ தனிமையை உணரும் போது அவருடைய கரங்களைப் பிடித்துக்கொள் - ஆமென்*







Walk with God when your heart needs company.
Turn to God when you need someone to lean on.
Take His hands when you feel alone

**the word of christ** இருந்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509




**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 253

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யார்? யாருக்குப் பயந்ததினால் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக்கொண்டான்?
2. நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை என்பது எப்படியிருக்கிறது?
3. எந்த ராஜா என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருள் ஒன்றுமில்லை என்று சொன்னான்?
4. தேவன் எவரைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்?
5. தாவீது இஸ்ரவேலையெல்லாம் ஆண்டு, தன்னுடைய ஜனத்திற்கெல்லாம் என்ன செய்தான்?
6. நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு நான் எதைப் பிடித்துக்கொள்ளவேண்டும்?
7. எந்த ராஜா பேய்களுக்கென்றும், தான் உண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்கென்றும் ஆசாரியர்களை ஏற்படுத்தினான்?
8. சகலமும் எவரைக்கொண்டும் எவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது?
9. நீர் திடன்கொண்டு இதைச் செய்யும் என்று யார்? யாரைப் பார்த்துசொன்னான்?
10. தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் எப்படி நடக்கவேண்டும்?

நீங்கள் மாத இதழின் வாசகரா?
இவ்விதழை நிறுத்தி நிதானமாக படித்தால் 1 மணி நேரத்தில் படித்துவிடலாம்.

## வேதாகம ஆய்வு... 32

## எலிமெலேக்கு
## Elimelech



1. என் தேவன் ஒரு ராஜா என்று அர்த்தம்.
2. யூதா கோத்திரத்தான் - ரூத் 1:2
3. நகோமியின் கணவன் - ரூத் 1:3
4. போவாஸ் இவனுடைய உறவுமுறையான் - ரூத் 2:1-3
5. தேசத்திலே பஞ்சம் உண்டானபடியால் மோவாப் தேசத்திற்கு போனார்கள் - ரூத் 1:1



## பரிசுத்த வேதாகமம் - The Holy Bible

ஹலோ! தம்பி தங்காய்! எப்படியிருக்கிறீங்க? நலம் தானே? கர்த்தர் உங்கள் எல்லாரையும் நல்ல சுகத்துடன் காத்துவருவார் என்று நம்புகிறேன். ஓ. கே. இன்று உங்களுக்கு பரிசுத்த வேதாகமத்தைப் பற்றி கூறவிரும்புகிறேன். ஓ! தெரியுமே அது கிறிஸ்தவர்களின் வேதப்புத்தகம். கிறிஸ்தவர்களுக்கு மட்டும் வேதப்புத்தகமல்ல. உலகிலுள்ள அத்தனை பேருக்கும் இது தேவையான புத்தகம். ஏன் தெரியுமா? இந்த பரிசுத்த வேதாகமம் தான், நாம் பார்க்கிற வானம் பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், உயிருள்ள, உயிரற்ற ஜந்துக்கள் எல்லாமே எப்படி உண்டானது என்ற வரலாற்றைக் கூறுகிறது. இது ஓர் அருமையான புத்தகம். இந்த புத்தகத்தை நாற்பதுக்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் 1600 வருட கால அளவில் அறுபது தலைமுறைகளாக எழுதி முடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. உங்களுக்கு பைபிள் வாசிக்கும் பழக்கம் உண்டா? இதை வாசிக்க வாசிக்க புதையல்களை தோண்டுவதைப்போல அதிகமதிகமான நல்ல விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவீங்க. இது ஒரு வரலாற்று புத்தகம். இது உலகம் உண்டான விதம், மக்கள் வாழ்ந்த விதம், நாம் இப்போது வாழவேண்டிய விதம் எல்லாவற்றையும் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. இந்த உலகத்தையும் நம்மையும் இதிலுள்ள யாவற்றையும் படைத்த கர்த்தர் எப்படிப்படைத்தார் என்று தெரியுமா? எல்லாவற்றையும் அவருடைய வார்த்தையினால் தான் படைத்தார். உண்டாகக்கடவது என்றார். உடனே உண்டாயிருச்சு! அப்பப்பா, கர்த்தர் எவ்வளவு வல்லமையுடையவர்! ஆமாம் அவர் சொன்னா போதும் எல்லாமே நடந்துவிடும்.

இந்த Pandemic Time ல் எல்லாரும் நல்லா ஜாலியாக பள்ளிக்குப் போகாமல் செல்போனை வைத்து விளையாடிக் கொண்டிருப்பீங்க, அப்பா, அம்மா மற்ற பெரியவர்கள் உங்களை அழைத்தால் கூட உங்களுக்குக் காதிலே விழாது அவ்வளவு இன்ட்ரஸ்டா பொழுதைக் கழிப்பீங்க இப்படியே இருந்தா, நீங்க ஸ்கூலில் படித்த ஒரு எழுத்துக் கூட ஞாபகத்தில் வராது. ஏன், நீங்க எந்த வகுப்பு படிக்கிறீங்க என்பதைக் கூட மறந்து விடுவீங்க. அப்புறம் எனக்குப் படிப்பே வரமாட்டேங்குது, படிக்கிறதெல்லாம் மறந்து போகுது என்றெல்லாம் சொல்லுவீங்க. ஆனா, பள்ளி திறந்தவுடன் கட்டாயம் பள்ளிக்குப் போகனும். பரிசுத்த வேதம் என்ன சொல்லுகிறது தெரியுமா? "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதிமொழிகள் 2:6) என்கிறது. பார்த்தீங்களா? கர்த்தர் வல்லமையுடையவர் அவர் ஒரு வார்த்தை சொன்னா போதும். நமக்கு மறந்து போன அத்தனையும் ஞாபகத்துக்கு வந்துவிடும். அப்படினா, நாங்க என்ன செய்யணும், எப்படி கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்வார், என்று தானே கேட்கிறீங்க. நீங்க தேவனிடத்தில் உங்களுக்கு தேவையானதை கேளுங்க, அப்புறம் பரிசுத்த வேதாகமத்தை தினமும் வாசியுங்க. உலகத்திலே பைபிள் தான் அதிகமாக அச்சிடப்படும் ஓர் நூலாக இருக்கிறது. அதிகமான மக்கள் இதைத் தான் வாசிக்கிறாங்களாம். நீங்களும் வாசிப்பீங்களா? தேவனை நோக்கி வேண்டிக் கொள்ளுவீங்களா? பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற இரு பகுதியினைக் கொண்ட 66 புத்தகங்களை உள்ளடக்கிய அற்புதமான புத்தகம் இது! Bye,bye, அடுத்த மாதம் சந்திப்போமா!

**மனப்பாடவசனம்**

**"கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" நீதி. 2:6**



# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 21 செப்டம்பர் - 2021 கனி - 10

**ஆசிரியருரை**

## யோபு பாவஞ்செய்யவில்லை
## Job Did Not Sin



இன்றைக்கு பாவஞ்செய்கிறவர்கள் பலவிதமான காரணத்தைச் சொல்லுகின்றனர். ஆதாமும் ஏவாளும் சர்ப்பம் எங்களை வஞ்சித்தது என்றனர். அதைப்போல ஒவ்வொரு வரும் ஒவ்வொரு காரணத்தை சொல்லி இதனால்தான் நாங்கள் பாவஞ்செய்தோம் என்று சொல்லி பாவத்திற்கு அடிமைகளாக இருக்கின்றனர். யோபு என்ற தேவதாசனைக்குறித்து யோபு புத்தகத்தில் படிக்கின்றோம். அவனுக்கு வந்த இழப்பீடுகளை அறியாதவர்கள் எவரும் இருக்க முடியாது. ஆனாலும் "இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப்பற்றிக் குறைசொல்லவுமில்லை" (யோபு1:22). அவன் துக்கநாட்களில் மட்டுமல்ல சந்தோஷத்தின் நாட்களிலும் தேவனைக்குறை சொல்லவில்லை. பொதுவாக சந்தோஷத்தின் நாட்களில் கர்த்தரை மறக்கிற கூட்டத்தைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். யோபு அப்படியல்ல; "அவன் குமாரர் அவனவன் தன் தன் நாளிலே தன்தன் வீட்டிலே விருந்துசெய்து, தங்கள் மூன்று சகோதரிகளையும் தங்களோடே போஜனம் பண்ணும்படி அழைப்பார்கள். விருந்துசெய்கிற அவரவருடைய நாள்முறை முடிகிறபோது, யோபு: ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளைச் செலுத்துவான்; இந்தப்பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்" (யோபு1:4,5). பொதுவாக தங்கள் பிள்ளைகள் தவறுசெய்திருந்தால் கூட பெற்றோர்களில் சிலர் ஒத்துக்கொள்ளமாட்டார்கள். என் பிள்ளைகள் அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள் என்று சொல்லுவார்கள். ஆனால் யோபோ ஒருவேளை தன் பிள்ளைகள் தேவனை தங்களுடைய இருதயத்தில் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களுக்காக தேவனிடத்தில் மன்றாடியிருக்கிறதைப் பார்க்கிறோம். இருதயத்தில் உள்ள காரியத்தை கர்த்தர் ஒருவரே அறிவார். இதை அறிந்த யோபு தன் பிள்ளைகளுக்காக பலிசெலுத்தி வேண்டிக்கொண்டான். சந்தோஷத்தின் நாட்களில் அநேகர் பாவத்தில் ஈடுபடுவார்கள். சந்தோஷம் ஒருவகையில் பாவஞ்செய்யத்தூண்டும். இதிலே அநேகர் விழுந்துபோவதை நாம் காண்கிறோம். யோபு சந்தோஷத்தின் நாட்களிலும் தன் குடும்பத்தைப் பாவத்துக்கு விலக்கி பாதுகாத்துக்கொண்டான்.

**அதைப்போல துக்கநாட்களிலும் பாவத்திற்கு விலகியிருந்தான்.** ஒன்று சந்தோஷத்தின் நாட்களில் மனிதர்கள் பாவஞ்செய்வார்கள் அல்லது துக்கநாட்களில் பாவஞ்செய்வார்கள். ஏனெனில் துக்கத்தை மறக்கவும், துக்கத்திலிருந்து விடுபடவும் இதைச்செய்கிறோம் என்பார்கள். யோபுவுக்கும் துக்கம் வந்தது; "அப்பொழுது யோபு எழுந்திருந்து, தன் சால்வையைக் கிழித்து, தன் தலையைச் சிரைத்து, தரையிலே விழுந்து பணிந்து; நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்" (யோபு 1:20,21). ஏழு குமாரர், மூன்று குமாரத்திகள், ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐந்நூறு ஏர்மாடுகள், ஐந்நூறு கழுதைகள், திரளான பணியாட்களை இழந்த யோபு தன் உதட்டினாலும் பாவஞ்செய்யாமல் இவையெல்லாம் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் திரும்பவும் எடுத்துக்கொண்டார் அவருக்கு ஸ்தோத்திரம் என்று நன்றி சொன்னான். ஒரு சிறு பொருளைக்கூட இழக்க முடியாமல் கஷ்டப்படக்கூடிய நீங்களும் நானும் இந்தவிதமாக சொல்லி பாவத்திற்கு விலகி நம்மை துக்க நாட்களில் காத்துக்கொள்ள முடியுமா? சந்தேகமே! ஆனால் யோபு தன்னைப் பாதுகாத்துக்கொண்டார். அவர் தேவனை குறைசொல்லவில்லை. அநேகர் வாயில் வந்தபடியெல்லாம் தேவனை தூஷித்து, சபையை விட்டும், வீட்டை விட்டும், நாட்டை விட்டும் போய்விடுவார்கள். அவர்களால் இப்படிப்பட்ட இழப்பீடுகளைத் தாங்கிக்கொள்ள முடியாது. ஒருவேளை சிலர் தங்களை மாய்த்துக்கொள்ளு வார்கள். யோபுவோ தன் தேவன் மேல் நம்பிக்கையோடிருந்தார். இவையெல்லா வற்றையும் கொடுத்த தேவன் வல்லவர், அவர் திரும்பகொடுப்பதற்கும் வல்லமையுள்ள தேவன் என்ற ஆழமான நம்பிக்கையை உடையவராயிருந்தார்.

தாவீது என்ற அரசன் தன்னுடைய ராஜ்யத்தின் நாட்களில் ஒரு பெரிய பாவம் செய்தான். அது என்னவென்றால்; "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன? ஏத்தியனாகிய உரியாவை நீ பட்டயத்தால் மடிவித்து, அவன் மனைவியை உனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டு, அவனை அம்மோன் புத்திரரின் பட்டயத்தாலே கொன்றுபோட்டாய்" என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது (2சாமு.12:9). இந்த வார்த்தையின் நிமித்தம் தாவீது மனங்கசந்து அழுதான். ஆனால் யோபு சொல்கிறார்; "என் மனம் யாதொரு ஸ்திரீயின்மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக; வேற்றுமனிதர் அவள்மேல் சாய்வார்களாக"என்கிறார் (யோபு 31:9,10). இப்படியாக தன் கண்களோடே உடன்படிக்கை செய்து தன்னை பாதுகாத்துக்கொண்டவன் யோபு. நீங்கள் உங்களை எப்படி பாதுகாத்துக்கொண்டு வருகிறீர்கள். பாவத்துக்கு விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது யோபுவோடு இருந்த கர்த்தர் உங்களோடும் இருப்பார்.

ஒரு முறை தாவீதை பென்யமீனர் தூஷிக்கும்போது; "செருயாவின் குமாரரே, எனக்கும் உங்களுக்கும் என்ன? அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைத் தூஷிக்கவேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்; ஆகையால் ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்கத்தக்கவன் யார் என்றான். பின்னும் தாவீது அபிசாயையும் தன் ஊழியக்காரர் எல்லாரையும் பார்த்து; இதோ, என் கர்ப்பப்பிறப்பான என் குமாரனே என் பிராணனை வாங்கத்தேடும்போது, இந்தப்



பரிசுத்தமாகுதல் நமக்குக் கிடைக்கும் பலனாயிருக்கிறது. இன்றைய நாளில் பரிசுத்தமென்றால் என்ன விலை எனக் கேட்கக்கூடிய நிலை உருவாகிவிட்டது. பரிசுத்தமானவரைப் பின்பற்றுகிறோம் எனச் சொல்லிக்கொள்ளுகிற கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்குள்ளும், கிறிஸ்தவத்துக்குள்ளும் பரிசுத்தம் வேண்டும். "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்..." என்று வேதம் கூறுகிறது (1பேது.1:16). நாம் தேவபக்தியாய் நடக்கும் போது பரிசுத்தமாகுதல் நமக்குக் கிடைக்கும் பலனாயிருக்கும். முடிவிலே நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வோம். இதையே அப்போஸ்தலனாகிய பவுல், 'இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்" (ரோம.6:22) எனக் குறிப்பிடுகிறார். நாம் கர்த்தருக்குப் பயந்து தேவபக்தியுடன் நடந்துகொள்ளும்போது வரவிருக்கும் மகிமைக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது' (1பேது.1:5). ஆம், கடைசிக்காலத்திலிருக்கிற நமக்கு சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற நம்முடைய இரட்சிப்புக்கு ஏதுவாக சுதந்தரம், அதாவது இனிவரவிருக்கிற நித்திய ஜீவனை பரலோகத்தில் சுதந்தரித்துக் கொள்ளப் போகிறோம். இவ்வகையான ஆசீர்வாதத்தைப் பெறும்படி தேவபக்தியை நமக்குள்ளாகக் காத்துக்கொண்டு, தேவபக்தியினால் வரக்கூடிய ஆதாயத்தைப் பெற்றுக்கொள்வோம்.

அன்பு சகோதரிகளே, 1தீமோ.4:8ன்படி "தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப்பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" என்பதை அறிந்தவர்களாக நடந்துகொள்வோம். "நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்" (1யோவா.2:25). நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள அன்பு, விசுவாசமே தேவபக்தியினை நமக்குள் பெருகப்பண்ணட்டும். நாம் அல்ல "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1யோவா.4:19). நாமாக அவரை விசுவாசிக்கவில்லை, இயேசுவே நமக்குள் விசுவாசத்தைத் துவக்கினார் (எபி.12:1) அதனால் அவரை விசுவாசிக்கிறோம். நாம் அல்ல அவருடைய திவ்வியவல்லமையே தேவபக்திக்கு வேண்டிய யாவற்றையும் அருளிச் செய்கிறது. நம்முடைய கிரியையினால் அல்ல, இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டுள்ளோம். இப்படியிருக்க நாம் ஒன்றுமே இல்லை, நம்மால் ஒன்றுமே செய்ய இயலாது. எல்லாமே அவருடைய ஈவாக இருக்கிறபடியால் தேவபக்தியாய் இருப்போம், இதனால் வரக்கூடிய ஆதாயம் அல்லது ஆசீர்வாதங்களை இம்மையிலும் மறுமையிலும் பெற்றவர்களாக சந்தோஷமாக வாழ்வோம். கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

தேவனிடத்தில் அன்புகூருகிற யாவருக்கும் எது நடந்தாலும் அது நன்மைக்கேதுவாக நடக்கிறதென்பதை அறிந்துகொள்ள வேண்டும். நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினைப் பெற்றுக்கொள்ளும்போது நம் வாழ்வில் சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கும். இதுவே தேவபக்தியினால் நமக்குக் கிடைக்கும் ஆதாயமாகும்.

**இம்மையில் ஆதாயம் (Profits in this Life):** நாம் தேவனிடத்தில் கொண்டுள்ள தேவபக்தியானது இப்பூமியின் வாழ்விலும் ஆதாயத்தை அல்லது ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. எங்கே? ஒவ்வொரு நாளும் படாதபாடு படுகிறோம் என்பீர்கள். இருக்கலாம், பல துன்பங்கள் உண்டு, 'தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள் என்று எழுதியிருக்கிறதே, துன்மார்க்கன் செழித்துப்போகிறான், தேவபக்தியாய் நடக்கவேண்டுமென்று எண்ணும்போதே துன்பம் தான் மிகுதியாகிறது என நீங்கள் அங்கலாய்க்கலாம். ஆனால் இம்மைக்குரிய இத்துன்பங்கள் எல்லாம் புகையைப் போல மறைந்து போகக்கூடியது. நாம் 1தீமோத்தேயு 6:6 ல் "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்று வாசிக்கிறோம். இதன்படி நடப்போமானால் நம்முடைய தேவபக்தி மிகுந்த ஆதாயத்தை, ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். ஆனால் ஸ்திரீகளாகிய நமக்கோ, போதும் இனி வேண்டாம் என்ற எண்ணமே உருவாவதில்லை. அதை வாங்கவேண்டும், இதை வாங்க வேண்டும், சமுதாயத்தில் நம்முடைய Status குறைந்துவிடக் கூடாது என்று சொல்லி ஏவாளைப்போல கண்களின் இச்சைக்கு இடம் கொடுத்து, அதிலே பழகிப்போய் விடுகின்றோம். எனவே நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஆசீர்வாதங்களையும் சிலவேளைகளில் இழந்து போனவர்களாய் காணப்படுகிறோம். "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது..." (2தீமோ.3:16). எனவே நமக்கு இருப்பவைகள் போதும் என்ற மனதுடனே வாழ்வோம், மிகுந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். நாம் தேவபக்தியாய் நடக்கும்போது இழந்து போனவற்றைக்கூட நூறத்தனையாய் பெற்றுக்கொள்வோம் என வேதம் கூறுகிறது. மாற்.10:30 ல் "இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொல்லுகிறார். நாம் தேவனைப் பிரியப்படுத்தி வாழும் போது அநேகக் காரியங்களை இழக்கக்கூடும், ஆனால் இழந்தவற்றை நூறத்தனையாக இம்மையிலேயே, இவ்வாழ்விலேயே நமக்குக் கொடுக்க தேவன் நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். கிறிஸ்துவினிமித்தம் அன்பானவர்கள், உறவினர்கள் நம்மைப் புறந்தள்ளலாம், ஆனால் பூமியெங்கும் நமக்கு நூற்றுக்கணக்கான சகோதர, சகோதரிகளையும் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்தையும் பெற்றுக்கொள்வோம். அது எவ்வளவு இன்பமானது! சற்றே சிந்தித்து தேவபக்தியினைப் பற்றிக்கொண்டு ஆதாயம் பெறுவோம்!

**மறுமையிலும் ஆதாயம் – (Profits in this Life to Come):** தேவபக்தியானது பின்வரும் ஜீவன் அல்லது மறுமையிலும் நமக்கு ஆதாயம் அல்லது ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது. தேவன் மேல் நாம் கொண்டுள்ள பயபக்தியினிமித்தம் நாம் நாளுக்கு நாள் பரிசுத்தமடைய வாஞ்சிக்கிறோம்.



பென்யமீனன் எத்தனை அதிகமாய்ச் செய்வான்; அவன் தூஷிக்கட்டும் அவன் அப்படிச் செய்யக் கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டிருக்கிறார். ஒருவேளை கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தனைகளுக்குப் பதிலாக எனக்கு நன்மையைச் சரிக்கட்டுவார் என்றான்" (2சாமு.16:10-12) ஒரு ராஜா நிந்தையையும் அவமானத்தையும் எண்ணாமல் தன்னை எப்படித் தேற்றிக்கொண்டு பாவத்திற்கு விலகியிருந்தார் என்று பார்த்தீர்களா? உங்களுக்கு வரும் அவமானங்களிலும் வேதனைகளிலும் உங்கள் நாவினாலும் இருதயத்தினாலும் பாவம் செய்யாது உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். தேவன் உங்களைக் காண்கிற தேவனாக இருக்கிறார். அவருடைய அனுமதியின்றி ஒன்றும் உங்களுடைய வாழ்க்கையில் நடைபெறாது. தேவன் உங்களை உள்ளங்கைகளில் வரைந்துவைத்திருக்கிறார் என்ற நம்பிக்கையோடிருங்கள். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்" (எசே.18:20). யார் பாவஞ்செய்வார்களோ அவர்களே அதற்குரிய தண்டனையை அடைவார்கள். இதிலே தகப்பனும் மகனும் உடன்பட்டவர்கள் அல்ல. அவர்களுடைய ஆத்துமாக்கள் தனித்தனியாகவே இருக்கிறது. அந்தப்படியே அவரவர் தேவனுக்கு கணக்கு ஒப்புவிப்பார்கள். ஆனால் பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும் எனக் காண்கிறோம். இதிலே யாரும் தப்பிக்கொள்ளமுடியாது. இதை அறிந்த தாவீது தன்னை தூஷிக்கிறவர்கள், தூஷிக்கட்டும் என்று தேவனுடைய சமுகத்தில் பொறுமையுடன் காத்திருந்தார். நீங்களும் பொறுமையுடனிருங்கள்.

யோபு தன்னுடைய வாழ்க்கையில் பாவஞ்செய்யாமல் தன்னை பாதுகாத்துக்கொண்டதைப்போல அவரை குறைசொல்லவுமில்லை எனக் காண்கிறோம். ஏனெனில் யோபு சொல்லுகிறார்; "அவர் அவனோடே வழக்காடச் சித்தமாயிருந்தால், ஆயிரத்தில் ஒன்றுக்காகிலும் அவருக்கு உத்தரவு சொல்லமாட்டானே" என்கிறார் (யோபு 9:3). ஆம், அன்பானவர்களே ஆயிரத்தில் ஒன்றுக்குக்கூட நம்மால் அவருக்கு உத்தரவு சொல்லமுடியாது. ஏனெனில் எல்லாம் அவருடையது அவருக்கு நாம் ஆலோசனை சொல்லவும் முடியாது. அவர் கேட்கும் கேள்விகளுக்கு பதிற்சொல்லவும் முடியாது. நாம் மண்ணாயிருக்கிறோம். அவருடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறோம். அவர் சகலத்தையும் அறிகிறார். அவருக்கு முந்தி ஒன்றை சொல்லக்கூடியவன் யார்? சகலத்தையும் தமக்கென்று சிருஷ்டித்தார். ஒரு பிரதானி தேவமனிதனுடைய வாத்தையைத் தள்ளி "அந்தப் பிரதானி தேவனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தரமாக: கர்த்தர் வானத்தின் மதகுகளை உண்டாக்கினாலும், இந்த வார்த்தையின்படி நடக்குமா என்று சொல்ல; இவன், இதோ, உன்னுடைய கண்களினாலே அதைக் காண்பாய், ஆனாலும் அதிலே சாப்பிடமாட்டாய் என்றானே. அந்தப் பிரகாரமாகத்தானே அவனுக்கு நடந்தது; ஒலிமுகவாசலிலே ஜனங்கள் அவனை நெருங்கி மிதித்தினாலே அவன் செத்துப்போனான்" (2இரா.7:19,20). இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும், ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் நாளை இந்நேரத்திலே சமாரியாவின் ஒலிமுகவாசலிலே விற்கப்படும் என்ற எலிசாவின் வார்த்தைகளைப் புறக்கணித்த இந்த பிரதானி அதே வாசலிலே இதைப் பார்த்து அதை புசிக்காமல் இறந்துபோனான். கர்த்தருடைய வார்த்தையை புறக்கணிக்கிறவர்கள் இந்த பிரதானிக்குச் சம்பவித்ததை நினைக்கவேண்டும்.

மேலும், கர்த்தர் யோபுவுடன் பேசும்போது; "சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்திபடிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார்" (யோபு40:2). கர்த்தருடைய அதிசயங்களையும் ஆலோசனைகளையும் அநேகர் புறம்பாக்கிப்போடுகின்றனர். அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் மேகங்களுக்குக் கட்டளையிட மழையை வருஷிக்கப்பண்ணும், அவர் பூமியை நோக்கிப் பார்க்க பூமி அதிரும். காற்றும் மழையும் அவர் சொல்படி செயல்படும். அவருக்கு முன்பாக மனிதன் எம்மாத்திரம்? இவைகளையெல்லாம் அறிந்த யோபு தன்னுடைய வாழ்க்கையில் பாவம் செய்யாது தன்னைப் பாதுகாத்துக்கொண்டான். இஸ்ரவேலரோ, தேவனுக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்துகொண்டே இருந்தனர். ஆகையால் எரேமியாவைக்கொண்டு அவர்களை எச்சரித்தார். "ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம் செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.3:20). துரோகம் என்ற வார்த்தையை சில இடங்களில் நாம் வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் துரோகியான யூதாஸ்காரியோத்து என படிக்கிறோம். துரோகம் என்பது நம்பிக்கைக்கு விரோதமான செயலாக இருக்கிறது. தேவன் எரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு இப்படிச் சொல்வதற்கு பலகாரணங்கள் இருந்தது அதில் ஒன்று இஸ்ரவேலர் கர்த்தராகிய தேவனை விட்டு விக்கிரகங்களை நாடியபடியால் இவ்விதமாக எச்சரித்தார். இன்றும் அநேகர் இவ்விதமாக செய்யும்போது தேவனுக்குத் துரோகம் செய்கிறவர்களாகவும், துரோகிகளாகவும் மாறுகின்றனர். இப்படிப்பட்ட பாவம் உங்களில் இருக்குமானால் இன்றே அவைகளை விட்டு விட்டு யோபுவைப்போல உள்ளத்திலும், இல்லத்திலும் பாவம் வந்து குடிகொள்ளாதபடி கர்த்தருடைய வசனத்தினாலும், உங்களுடைய உறுதியான ஜெபத்தினாலும், தேவனுடைய இரங்கங்களினாலும், உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**கோபத்தைக் காட்டிலும் பாவம் கொடூரமானதா?**

ஆம், கோபம் கொள்ளுவதால் ஒரு மனிதன் பாதாளத்திற்குச் செல்லமாட்டான். கோபம் ஒருவேளை நியாயமானதாக இருக்கலாம். ஆனால் பாவம் எந்த வகையிலும் நியாயமானது அல்ல. பாவத்திற்கு ஒருவரும் சாக்குப்போக்குச் சொல்லமுடியாது. ஏனெனில்; "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள். நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்" என வேதம் எச்சரிக்கிறது (சங்.4:4,4). இதையே அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையாருக்கு எழுதிய கடிதத்தில்; "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது" என்று எழுதுகிறார் (எபே.4:26). பாவம் அவ்வளவு மோசமானதாக இருக்கிறது. ஆகையால் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பாவத்தைக் கர்த்தர் வெறுக்கிறார். பாவம் செய்கிறவர்கள் மனந்திரும்பவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். பாவத்தோடு வாழும் வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையல்ல. "பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்கிறார் பிரசங்கி (பிர.8:12). உங்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. கோபத்தை சூரியன் அஸ்தமிக்கிறதற்குள்ளாக விட்டு விட்டு பாவத்தை உங்களை விட்டு முற்றிலுமாக நீக்கிப்போடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



பெண்கள் பகுதி

# தேவபக்தியின் மும்மடங்கு ஆதாயம்
## Threefold Profit of Godliness

*-Glory Arjunan*



பொதுவாக நம்நாட்டுப் பெண்கள் பக்தியுள்ளவர்களாகக் காணப்படுவர். குறிப்பாக கிறிஸ்தவ வட்டாரங்களில் பெண்கள் அதிக பக்தியுள்ளளவர்களாகவே இருக்கின்றனர். எனவே ஜெபக்கூட்டங்களிலும் சபை கூடுகைகளிலும் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. நல்லது! கிறிஸ்தவ ஸ்திரீகள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்களுக்குத் தேவபக்தியானது மிகவும் அவசியம். ஏனென்றால் தேவபக்தியானது இம்மையில் மட்டுமல்லாது மறுமையிலும் பலன்தருகிறதாக உள்ளது. இதைத்தான் பவுல் தீமோத்தேயுக்கு எழுதின போது "சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது, தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1தீமோ.4:8) என்று எழுதுகிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, "இந்த வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமாயிருக்கிறது" (1தீமோ.4:9). இந்த தேவபக்தியின் மும்மடங்கு ஆதாயம் அல்லது லாபம் அல்லது ஆசீர்வாதம் நிறைந்துள்ளது எவ்வாறெனக் காண்போம்.

**எல்லாவற்றிலும் ஆதாயம் (Profits in all thing):** ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் நமக்குக் கொடுப்பது அவருடைய திவ்விய வல்லமை. நாம் நம் வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களைச் சாதிக்கவேண்டுமென முயற்சிக்கிறோம். நம்முடைய சரீரத்தில் பலபாடுகள்பட்டு சாதிக்க நினைக்கும் அத்தனையுமே பூரண பலனைக்கொடுப்பதில்லை. அவைகளெல்லாம் ஏதோ சிறிதளவு பிரயோஜனத்தை மட்டுமே கொடுக்கிறது. சரீரத்தை ஒடுக்கி என்னென்னமோ பயிற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆனால் வேதம் இவைகளெல்லாம் அற்ப பிரயோஜனமுள்ளது அதாவது சிறிதளவு சரீரத்திற்கு நன்மையளிக்கிறது என்று சொல்லுகிறது. ஆனால் தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் (இன்றைய நம் வாழ்விற்கும்) இனி வரப்போகிற ஜீவனுக்கும் பிரயோஜனமுள்ளது. நாம் தேவபக்தியாயிருக்கும்போது மட்டுமே இம்மையிலும் மறுமையிலும் பிரயோஜனத்தை அல்லது நன்மையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வேதம் "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி.." (2பேது.1:3) என்று சொல்லுகிறது. அவருடைய திவ்விய வல்லமை மட்டுமே நம் ஜீவனுக்கு (வாழ்வுக்கு) வேண்டிய யாவற்றையும் தந்தருளுகிறதாய் இருக்கிறது. நம்முடைய பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, அவருடைய ஆவியினாலே எல்லாம் ஆகும் என்று வேதம் கூறுவதை அறிவோம். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோ.8:28). ஆம்,

## வேத அறிவுப்போட்டி 250-ன் விடைகள்

1. கல்தேயர் - ஆபகூ.1:11
2. பிலேமோனுக்கு - பிலே.19
3. அம்மோன் - செப்.2:8
4. ஆம் - எபி.12:6
5. ஆகாய் - ஆகா.2:11
6. ஓடிப்போவான் - யாக்.4:7
7. சகரியா - சகரி.7:13
8. தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் - 1பேது.1:10
9. சாட்சியாயிருக்கிறார் - மல்.2:14
10. ஆம் - 2பேது.1:20

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
2. J.S. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
3. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
4. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
5. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
6. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
7. Sis. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
8. Mrs. ஞானம்பிலிப் - கோவை
9. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
10. T. ராஜாத்தி - கோம்பை
11. Mrs. கிறிஸ்டோபல் சாலொமோன் - கோம்பை
12. Mrs. ஜெயராணிஜெபராஜ் - மேற்குதாம்பரம்
13. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
14. V.C. ரூபவல்யா - நாசரேத்
15. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
16. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் - மதுரை
17. J. மேரிஜெயக்குமார் - மதுரை
18. Mrs. ரூத் ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
19. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
20. Mrs. ரூக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
21. E. அதிசயம் - பனைகுடி
22. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
23. S. சந்திரகாந்தா - நல்லூர்
24. C. அன்புராஜ் - சென்னை
25. D. லாட்லிதேவதாஸ் - கன்னியாகுமரி
26. Mrs. ராஜம்மாள் மனோகரன் - சென்னை
27. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
28. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
29. Mrs. அன்னம்மாள் - தூத்துக்குடி
30. S. செல்வராஜ்சாலொமோன் - திருநெல்வேலி
31. J. ஆலிவ் - கோவை
32. T. ஏஞ்சலின் நேசமலர் - சாந்தாபுரம்
33. Mrs. ஜெபா நியூட்டன் - திருநெல்வேலி
34. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
35. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
36. D. விஜயா கார்த்திக் - வேலூர்

**போட்டியாளர் கவனத்திற்கு**
சிலர் பல முறை ஒரே இதழுக்கான வேத அறிவுப்போட்டி விடைகளை எழுதி அனுப்புகிறீர்கள்.
அதை தவீர்க்கவும்.



## வேத அறிவுப்போட்டி 251-ன் விடைகள்

1. யாக்கோபுடைய, பென்யமீன் - ஆதி.44:30
2. யோவான் - 1யோவா.1:1
3. பொழுதுபோகுமுன்னமே - யாத்.22:26
4. யோவான் - வெளி.1:9
5. ஆம் - லேவி.19:19
6. மற்றவர்களை - மத்.7:1
7. இரண்டு - எண்.10:2
8. ஜீவனுள்ளோருக்குத் - மாற்.12:27
9. மோசே - உபா.9:21
10. சீஷனாயிருக்கமாட்டான் - லூக்.14:27

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. P. சந்திராடேனியேல் - திருநெல்வேலி
2. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
3. K. ராணிமூர்த்தி - ஏர்வாடி
4. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
5. S. செல்வராஜ்சாலொமோன் - திருநெல்வேலி
6. D. அன்புக்கமலம் - காரைக்குடி
7. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி - திருச்சி
8. D.A. அன்புக்கமலம் - காரைக்குடி
9. Bro. ஹோசியா ஹரிராகவன் - வேப்பம்பட்டு
10. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
11. Mrs. ஆலிஸ்குணசீலி - சாயர்புரம்
12. V.C. ரூபவல்யா - நாசரேத்
13. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
14. J. ஆலிவ் - கோவை
15. Mrs. ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
16. Mrs. பாலின்மார்ட்டின் - சிவகங்கை
17. Mrs. ஜேன்தர்மராஜ் - திருநெல்வேலி
18. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
19. Mrs. நவரத்தினம்ஞானராஜ் - நாசரேத்
20. R. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
21. Sis. கஸ்தூரி - ஒட்டநத்தம்
22. Mrs. ஃபிராங்கலினாஜான் - ஊட்டி
23. T. ராஜாத்தி - கோம்பை
24. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
25. Mrs. பாலின்டேனியேல் - சென்னை
26. S. சாந்தகுமாரி - நாசரேத்
27. C. அருள்ராஜ் - சென்னை
28. Mrs. கிறிஸ்டோபல் சாலொமோன் - சென்னை
29. Mrs. ஞானம்பிலிப் - கோவை
30. E. அதிசயம் - பனைகுடி
31. J. பிச்சை - விருதுநகர்
32. Mrs. ராஜம்மாள் - சென்னை
33. Mrs. ரூத்ஜெயராணி - திருநெல்வேலி
34. Sis. விஜய காந்தி - வேலூர்
35. Mrs. சாந்தாபழநி - தருமபுரி
36. R. பாரதி - கோபி
37. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
38. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
39. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
40. Mrs. ஜெபாமோசஸ் - தூத்துக்குடி
41. Mrs. ரூக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
42. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
43. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
42. Mrs. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்





- வாலிபர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...
- நமது மாத இதழ் எந்தவிதமான தடையின்றி வெளிவர...
- விசுவாச குடும்பங்களுக்காக...
- தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகள் மனந்திரும்ப...
- உலகமும் உலக ஜனங்களும் காக்கப்பட...
- உலகம் வெப்பமயமாகி வருவதால் அரசின் திட்டங்களுக்கு ஒத்துழைக்
- செல்போன் சாதனம் நற்காரியங்களுக்கு பயன்பட...



## நாம் ஏன் ஆராதனையில் வாய்மொழி பாடலை மட்டும் கட்டாயப்படுத்துகிறோம்

### Why We Have Vocal Music Only In Worship

*-J.C.Choate*



கிறிஸ்துவின் சபையாராகிய நாம் மற்ற அநேக சமயக் குழுக்களிலிருந்து வேறுபட்டிருக்கின்றோம், ஏனென்றால் நம்முடைய ஆராதனையில் நாம் வாயினால் பாடுகின்றதை மட்டுமே ஏற்றுக்கொள்கிறோம். ஆனபடியினால், நாம் நம்முடைய பாட்டினை இசைக் கருவிகளோடு இணைக்கிறதில்லை. இது வித்தியாசப்படுத்துவதற்காக செய்வதில்லை என நான் தாமதமின்றிச் சொல்லுவேன். மாறாக, வேதாகமம் இவ்வாறு போதிக்கின்றபடியால், நம்முடைய ஆராதனை வேளைகளில் வாயினால் பாடுகின்றதையே ஏற்றுக்கொள்கிறோம்.

இரண்டு விதமான இசை உண்டு. ஒன்று வாய்மொழியில் பாடுவது இன்னொன்று இசைக்கருவியினால் பாடுவது. வாய்மொழி சங்கீதமானது பாடுகின்ற, இனிமையான ஒலியெழுப்புகின்ற இணக்கமான மனிதக் குரல்களாக, மேலும் உலகத்தில் மிக அழகான சங்கீதமாக வெளிப்படுகின்ற ஒன்றாகும். இந்தவிதமான சங்கீதம் தேவனுடைய படைப்பிலிருந்து வருகிறது. இது ஆத்துமாவிலிருந்து வருகிறது மேலும் நம்முடைய சிருஷ்டிகரராகிய தேவனுக்கு துதியாகச் செலுத்தப்படுகிறது. இது முழுவதும் ஆவியாயும், ஜீவனாயுமிருக்கிறது. இசைக்கருவியின் இசை மனிதனால் உருவாக்கப்பட்ட இசைக்கருவியிலிருந்து வருகிறது. இவ்வகையான கருவிகள் ஜீவனற்றது. அவைகள் ஆத்துமா அல்லது ஆவியைக் கொண்டிருக்கவில்லை. அக்கருவிகளின் மேல் மனிதன் அடிப்பதினாலும், அவைகளை இழுப்பதினாலும் அல்லது அவைகளை மீட்டுவதினாலுமே அவைகள் ஒலிகளை எழுப்புகின்றதாயிருக்கிறது. இப்போது இதன் வினாவானது; தேவன் தம்முடைய சிருஷ்டிகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா அல்லது மனிதனுடைய படைப்புகள் தம்மை துதிக்கும்படி விரும்புகிறாரா? எது அவருக்கு மிகவும் கருத்துள்ளதாயிருக்கும்? எபிரெய எழுத்தர், “ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்” (எபி.13:15) என்கிறார். நாம் நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள். அது நம்முடைய கனியாக இருக்கும். நம்முடைய பேச்சு, நம்முடைய பாட்டு, நம்முடைய ஜெபங்கள், நம்முடைய துதியின் வார்த்தைகள் போன்றவைகளே நம்முடைய உதடுகளின் கனியாக இருக்கும். யாருக்கு இது செலுத்தப்பட வேண்டும்? நிச்சயமாக, தேவனுக்கே.

நம்முடைய உதடுகளின் கனியினால் தேவனைத் துதிக்கின்றதின் நோக்கத்தைத் தொடர்ந்து பார்க்கையில், பவுல், “சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம்பண்ணி, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும்

எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து'' (எபே.5:19,20) என்று சொல்லுகிறார். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு அல்லது பாடிக்கொண்டு, அதாவது பாடல்களின் பல்வேறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாடிக்கொண்டு என்று சொல்லுவதை தயவுசெய்து கூர்ந்து கவனியுங்கள். அத்தோடுகூட அவைகள் ஆவிக்குரியதாகவும் வேதவசனங்களுக்கேற்றபடியாகவும் இருக்கவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். கடைசியாக, அவர் இந்த சங்கீதங்கள் இருதயத்தில் பக்தியுடன் பாடப்படவேண்டும், வாத்தியக்கருவிகளினால் அல்ல என்று குறிப்பிட்டுச் சொல்கிறார். இப்போது கிறிஸ்தவர்கள் பாடிக்கொண்டே இருந்தால் மட்டும், அவர்கள் தேவனை ஆராதிக்கமுடியுமா? ஒருவேளை நீங்கள் ஆம் என்று கூறலாம். ஆனால் வாத்தியக்கருவியோடு பாடுவதுபற்றி என்ன சொல்லலாம்? வேதவசனங்கள் அது பற்றி போதித்தால் அது நன்றாக இருக்கும், ஆனால் வேதவசனங்கள் எங்கே அவ்வாறு போதிக்கிறது? அவ்வாறு வசனங்கள் போதிக்கவில்லையென்றால், நம்முடைய சங்கீதத்திற்கு வாத்தியகருவியின் இசையைக்கூட்டினால், அப்புறம் நாம் கர்த்தருடைய சித்தம் செய்கின்றவர்களாயிருப்போமா?

மீண்டும் பவுல், ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப்பக்தியுடன் பாடி'' (கொலோ.3:16) என்கிறார். இங்கே பவுல் என்ன சொல்கிறார்? அவர் ஆவிக்குரிய மற்றும் ஞானப்பாட்டுகளினாலும் வார்த்தையினாலும் போதித்து புத்திசொல்லிக் கொண்டு கர்த்தரைத் துதித்துப்பாடுவதின் மூலம் கிரியை நடப்பியுங்கள் என்று **கிறிஸ்துவின் வசனத்தை** வலியுறுத்திச் சொல்கிறார். அதுவே உண்மையாயிருக்கின்றது, பவுலுடைய கூற்றில் வாத்தியகருவி இசையை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதாக காண்கிறீர்களா? இல்லையென்றால், ஆராதனையில் தேவனை ஸ்தோத்தரித்துப்பாட வாத்தியக்கருவி இசையை இணைக்கும்படி தொடர்வீர்களானால் நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு கூட்டிக் கொண் டவர்களாயிருக்கமாட்டீர்களா?

ஆனால் இதனால் ஒன்றும் தவறில்லையென நீங்கள் விவாதிக்கலாம். பிறகு யாரும் எந்தகாரியத்திலும், வேறொன்றிலும் இதில் தவறொன்றையும் காணவில்லை எனத் தொடர்ந்து கூறலாம். முக்கிய குறிப்பானது, நாம் தேவனுடைய வார்த்தையின் போதனையில் கண்டிப்பாக உறுதியாயிருக்க வேண்டும். நாம் அவ்வாறு இல்லையென்றால், பிறகு ஏன் எப்படியாகிலும் இது குறித்து கலங்குகிறீர்கள்?

இது எனக்குப்பிடிக்கிறது அல்லது வாத்தியக்கருவியை மீட்டும் தாலந்தையும் திறமையையும் பெற்றிருக்கிறவர்கள் பற்றிய காரியமென்ன? என்றும் நீங்கள் வாக்குவாதத்துடன் திரும்பவும் வரலாம். அவர்கள் வாத்தியக்கருவிகள் மூலம் சங்கீதம் பாடிக் கர்த்தரை ஸ்தோத்தரித்தால், தேவன் அதனால் மகிமைப் படுத்தப்படமாட்டாரா? மீண்டும் நான் என்ன விரும்புகிறேனோ அதுபற்றிக் கவலை இல்லை, ஆனால் இது தேவன் என்ன விரும்புகிறாரோ அது பற்றியதாகும். ஒருவர் வாத்தியக்கருவியை இசைக்கும் தாலந்து அல்லது திறமை பெற்றிருந்து, அதன் அடிப்படையில் தேவனைத் துதிக்கும்படி அவன் வாத்தியக்கருவியை இசைக்க அனுமதிக்கப்படவேண்டுமானால், அந்த தாலந்துகளையும், திறமைகளையும் பெற்றிராத மற்றவர்கள் பற்றிய காரியம் என்ன? அந்தத் திறமைகளைக் கர்த்தருக்குக் கொடுக்கவேண்டுமென அப்பேர்ப்பட்ட திறமைகளை



யார் அளவுக்கு மிஞ்சிய மயக்கமருந்தினால் மரிக்கிறான்? யார் அதிகமான போதை மருந்து மயக்கத்தினால் உலகத்தின் அசுத்தத்தில் வசிக்கிறபோது தன் குழந்தைகளை வீட்டில் தனியாக விட்டுவிட்டுச் செல்லுகிறாள்? தன்னுடைய தாயின் உலகஇன்பமான போதைபழக்கத்தினால் யாருடைய குழந்தைகள் போதைப்பழக்கத்திற்கு அடிமையாக அல்லது கொடூரமான அங்கீனமாக மற்றும் மூளை வளர்ச்சி குறைவாக பிறந்துள்ளனர்?

யார் பல வருடங்களாக புகைப்பிடித்தபின் மூச்சுவிடமுடியாதபடி நுரையீரல் நோயினால் அவதிப்படுகின்றனர்? யார் உணர்ச்சிமிக்க, நிதி சம்பந்தபட்ட, உதவியற்று மரிக்கிறவர்களாக, மருத்துவத்திற்காக எண்ணற்ற கிரயம் செலுத்தியும் ஒரு போதும் குணமாக்கமுடியாத நோயினாலும் அவதிபடுகிறான்?

யார் தான் கொண்டிருந்த அனைத்தையும் சூதாடி தொலைத்து தன்னுடைய வாழ்க்கை சாப்பாட்டிற்கும் வழியில்லாமல் போனதினால் தற்கொலை செய்கிறான்? மற்றவர்கள்போல் வெறுப்பு மற்றும் மனகசப்பு நிறைந்த இருதயத்தைக் கொண்டிருப்பதினால் உயர் இரத்த அழுத்தமும் சரீரப் பிரச்சனைகளையும் யார் அதிகரிக்கிறான்? யார் சகிப்புத்தன்மையற்ற மனநிலைகொண்டிருப்பதினால், குடும்பத்திற்காக, நேசிக்கப்பட்டவர்களுக்காக, நண்பர்களுக்காக, கூட்டாளிகளுக்காக வாழ்க்கையை நாசமாக்குகிறான்?

✦ ஒரு மனிதன் மனதில் எல்லா வேலிகளையும் நீக்குகிற பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிக நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒருவன் தான் விரும்புகிறதையெல்லாம் செய்கிறபோது, என்ன நடக்கிறது? அவன் 'விதிகளை மீறுவதில்' சந்தோஷமடையலாம், மேலும் அவன் தெரிந்து கொள்ளுகிறதை யெல்லாம் செய்வதில் சுதந்திரவாளியாக இருக்கின்றோம் என நினைக்கலாம், ஆனால் அவன் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவனாக மாறுகிறான். எல்லா விதிகளும் சிறந்த வாழ்க்கை, குறைந்த எதிர்ப்புதன்மை மற்றும் மனிதனுக்கிடையே குறைவான பிரச்சனைகளை உருவாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவன் விதிகளை புறம்பாக்கும்போது, பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பிலிருந்து அவன் தாமே புறம்பாக்கப்படுகிறான்.

✦ ஒரு மனிதன் எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கும் பொழுது, மறுபடியும் சாத்தான் ஒரு மிகப்பெரிய நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் ஒரு மனிதன் தன் சுய- நலனுக்காக ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் தியாகம் பண்ணுகிறபோது என்ன நடக்கிறது? பொய்,ஏமாற்று, களவு போன்றவைகள் அம்பலப்படுத்தப்படும்போது, யார் ஒவ்வொன்றையும் இழக்கிறான்? பாலியல் தொற்று வியாதிகள் மூலம், எய்ட்ஸ் வியாதியின் மூலம், கருச்சிதைவினால் உணர்ச்சிமிக்க சரீரத் தழும்புகள் மூலம், யாருடைய சரீரம் அழிந்து போகும்? உதவியற்றவனாக, முதியோனாக குறைபாடுள்ளவனாக, ஒருவன் ''மாய்த்துக்கொள்ள''-கொன்றுவிட- ஆயத்தமாயிருந்தால், அவன் உதவியற்றவனாகவும், வயதானவனாகவும், குறைபாடுள்ளவனாகவுமிருக்கும் போது அவனுக்கு என்ன நேரிடும்? ஒருவனுடைய நியாயங்கள் மற்றவர்களுடைய நியாயங்களால் நசுக்கப்படும் பொழுது, அவர்கள் குற்றவாளிகளாக மாறுகின்றனர்.

தேவனுடைய ஞானத்தில், நீண்டகாலத்திற்கு முன்பாக அவர் தம்முடைய வார்த்தையில், ''பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்''(ரோம.6:23) என எச்சரித்தார். நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் ஏற்படுத்தின இந்தக்கட்டளை பார்ப்பதற்கு ஒரு நியாயமற்ற கொடுங்கோன்மையான 'கட்டளை' அல்ல. இது ஒரு உண்மையான கூற்று. பாவம் தவிர்க்க முடியாத விளைவுகளைக் கொண்டுவரும்.

திரும்பச் சென்று உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள். சாத்தானுடைய தந்திரமான பொய்களை நம்பி உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்.

பெண்கள் பகுதி

## நான் உலகத்தின் "வேடிக்கை"யான காரியங்களை அநுபவிக்க விரும்புகிறேன்

### I Want To Enjoy 'Fun' Things of The World

*-Betty*



ஒரு கட்டுப்பாடான வாழ்வை தெரிந்துகொண்ட, மற்றும் தம் நண்பர்கள் மீது அன்பு காட்டுகிற கிறிஸ்தவர்களைப் பார்க்கின்ற அநேகர் இதற்கு எதிரிடையான ஒரு உலகப்பிரகாரமான இன்ப வாழ்வோடு இசைந்தவர்களாய், **அவர்கள் குறைந்தபட்சம் தங்களுடைய இளமைப் பருவத்திலாவது உலகப்பிரகாரமான காரியங்களை அநுபவிக்கவேண்டுமெனத் தீர்மானிக்கின்றனர்.** தங்களுடைய நினைவுகளில், கிறிஸ்தவர்கள் சுய-வெறுப்பு மற்றும் சிலுவை-சுமத்தல் போன்ற வேதனை நிறைந்த காரியங்களில் ஒன்றான வாய் விட்டு சிரிப்பதற்கும் கட்டுபாடுள்ள ஒரு வாழ்வு வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர் என எண்ணுகின்றனர். யார், ஆனால் ஒரு மதியீனன் தாமாகவே உலகத்தின் எல்லா ‘‘நன்மை’’யான காரியங்களை இழப்பானா?

**உலகம் கொடுக்கிறதான இன்பங்கள் எவையெவை?**

✦ **உலக இன்பம்**. ஒரு நபர் குடி, போதை, புகைபிடித்தல், சூதாடுதல், ஒழுக்கங்கெட்டசெயல், ஆபாசமான பாஷை, வெறுப்பு, மற்றும் சோதனைக்குரிய மற்ற நடத்தை போன்ற எந்த செயலையும் அனுமதிக்க விரும்புகிற இவைகளில் உலக இன்பத்திற்கு சுதந்திரம் உண்டு.

✦ **தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம்:** தவிர்ப்பதிலிருந்து சுதந்திரம் என்பது ‘‘விதிகளை’’ மீறும் ஒரு செயலாகும் அவன்/அவள் தன் இச்சைக்கேற்ப உடுத்திக்கொள்வது, தான் விரும்புகிற இடத்திற்குச் செல்வது, தான் தெரிந்தெடுக்கிற வாழ்க்கை முறையினை பின்பற்றுவது, மற்றவர்களுக்காக பொறுப்புள்ள தியாகம் செய்வதை தவிர்ப்பது ஆகும். இப்படிப்பட்ட சுதந்திரத்துடன், அங்கே பரஸ்பர உதவி, நீதி நெறி. ஒழுக்கம் அல்லது சமயக்கட்டுப்பாடுகள் போன்றவைகள் இல்லை. அங்கே இப்படிப்பட்ட காரியங்கள் ‘பாவம்’போலவும், இதைச் செய்ய வேண்டும் அல்லது இதைச் செய்யக்கூடாது போன்ற மனசாட்சிக்குரிய அறிவுறுத்தல் போலவும் தோற்றமளிப்பதில்லை.

✦ **ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு:** ஒரு நபருடைய சுய-நலங்களின் உயர்வு என்பது பொய், ஏமாற்று, அல்லது களவு போன்றவைகள். ஒருவர் பெற விரும்புகிறவற்றைக் கொண்டுவருமானால் இவைகளை அவன் செய்ய முடியும்; ஒருவனுடைய சுய சரீரத்தின்மேல் முழு அதிகாரம் செலுத்த கருச்சிதைவு அனுமதிக்கிறது, தீராத கொடிய வியாதியஸ்தரை மரிக்கவைத்தல் ஒருவனை தேவையிலுள்ளளோர் அல்லது உதவியற்றோர் மேலுள்ள பொறுப்புகளின் அதிகாரத்திலிருந்து விடுவிக்கிறது; உறவுகளில் வாழ்வது தனிப்பட்ட சுதந்திரத்தையும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு தெரிந்தெடுத்தல் மற்றும் ஒவ்வொரு தீர்மானத்திற்கும் எனக்கு எதுவெல்லாம் சரியோ அது ‘சரி’ என்பதே அடிப்படை ‘‘தத்துவம்’’ என்பதாகயிருக்கிறது. **ஆனால் இவ்வுலக இன்பங்கள் என்னென்ன விளைவுகளைக் கொடுக்கிறது?**

✦ ஒரு நபர் அனைத்து உலக இன்பங்களுக்குக்கான கதவுகளை மனதார திறக்கிற பொழுது, சாத்தான் ஒரு உணர்ச்சி மிகுந்த நல்ல காலத்தை வாக்குப்பண்ணுகிறான். ஆனால் உலக இன்பங்களிலிருந்து வரும் விளைவுகள் என்ன? யார் மதுவிருந்திலிருந்தும், ஆல்கஹாலுடன் தன் உடல்நலத்தை அழிக்கிறதிலிருந்தும் விடுவித்துக்கொள்ள எச்சரிக்கையாயிருக்கிறார்? யார் ஆல்கஹாலிலும் மற்ற துர்ப்பழக்க வழக்கங்களினாலும் தன் குடும்ப போஜனத்தையும், வீட்டையும், துணிமணிகளையும் வீணாக்குகிறார்? யார் ஒருவித குடிபோதைமயக்கத்திலிருக்கும் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அடிக்கிறான்?



ஆராதனைக்குள் திறமையற்ற அவர்கள் கொண்டுவரவேண்டுமென நாம் வாதிப்போமா? இந்தக் குறிப்பை நீங்கள் கவனிப்பீர்களென நான் நினைக்கிறேன்.

நீங்கள் வாத்தியக் கருவி இசையை வீட்டில் கொண்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் ஆராதனையில் அதை பயன்படுத்தலாம் என மீண்டும் இது விவாதிக்கப்படுகிறது. உண்மை என்னவென்றால், நம்மால் ஆராதனைக்குள் கொண்டு செல்ல இயலாத அநேக பொருட்கள் வீட்டில் காணப்படுகிறது. என்னுடைய குடும்பமும் நானும் இசையை விரும்புகிறோம், நாங்கள் வானொலியில், அல்லது கேசட் ரிக்கார்டில் இசையை உற்றுக்கேட்பது வழக்கம், ஆனால் ஆராதனைக்கு இது வரும்போது எங்களைப் பிரியப்படுத்துகிற அந்த காரியங்களை நிறுத்தி விட்டு, கர்த்தரைப் பிரியப்படுத்துகிற காரியத்தையே செய்ய ஆரம்பிக்கிறோம். நாம் வீட்டில் ஐஸ்கிரீம் சாப்பிடவும், ஐஸ் டீ சாப்பிடவும் விரும்புகிறோம், ஆனால் இந்தக் காரியங்களெல்லாம் ஆராதனைக்கு வெளியே செய்யப்பட வேண்டியதென நாம் உணருகிறோம்.

பழைய ஏற்பாட்டில் தாவீதும் மற்றவர்களும் இதைப் பற்றி போதித்தார்களென உரிமைபாராட்டி ஆராதனையில் வாத்தியக் கருவி இசையைப் பயன்படுத்துவதை ஆதரிப்பது முக்கியமான வாக்குவாதங்களில் ஒன்றாயிருக்கிறது. அவ்வாறு இருந்ததோ இல்லையோ, பழைய ஏற்பாடு பிரமாணம் தொடர்ந்து நிலைத்திருக்கவில்லை என்பது உண்மை, ஏனென்றால் கிறிஸ்து அதை எடுத்துப் போட்டு ஒரு புதிய பிரமாணத்தைக் கொடுக்கும்படி சிலுவையில் மரித்தார். அதை நாம், ‘‘.... நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின’’ (யோவா.1:17) என வாசிக்கிறோம். கிறிஸ்து நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் ஒழிந்து போகாது என்று சொன்னார் (மத்.5:17,18). கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தபோது அதை நிறைவேற்றினார், இவ்வாறாக பழைய பிரமாணத்தை நடுவிலிராதபடிக்கு எடுத்துப்போட்டார் (கொலோ.2:14). இந்தக் காரியம் இவ்வாறிருக்கையில், நாம் சங்கீதத்தை அல்லது பழைய ஏற்பாட்டின் மற்ற பகுதியை இன்று ஆராதனையில் வாத்தியகருவி இசையை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்த முடியாது. நம்முடைய தற்போதைய காலத்தில் செய்யாத மற்றும் செய்ய இயலாத பல காரியங்கள் அப்போது செய்யப்பட்டது.

இதை நியாயப்படுத்தும் முயற்சியில் இன்னொரு முக்கியமான வாக்குவாதம், பரலோகத்தில் இசைக் கருவி பயன்படுத்தப்படும் என்பதாகும். பரலோகத்தில் இசைக்கருவி இருக்குமானால், நிச்சயமாக நாம் இந்த பூமியிலே ஆராதனையில் இசைக் கருவி பயன்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம் என அவர்கள் தீர்மானிக்கின்றனர். உண்மையாகவே அவர்கள் வாத்தியக்கருவியைப் பற்றிபேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நேரடியான மனிதனால் உருவாக்கப்பட்ட, இயந்திர இசைக்கருவிகள் இருக்குமென வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் அல்லது வேறெங்கே வாசிக்க முடிகிறது? ஆனால் அப்படியே வாத்தியக்கருவியின் இசை இருக்குமானால், இன்று ஆராதனையில் அதை பயன்படுத்தும்படி நமக்கு கர்த்தர் அனுமதியளித்துள்ளார் என அர்த்தமாகிறதில்லை. பூமியிலே நாம் பெற்றிராத அநேகப் பொருட்கள் பரலோகத்தில் உள்ளன என்பது உண்மையான விஷயம். தேவன் குறிப்பாக ஆராதனையில் இன்று என்ன எதிர்பார்க்கிறார், மேலும் கடைசியாக பரலோகத்தில் தோற்றமளிக்கிற இருவேறுபட்ட பொருட்கள் என்ன?

வேதாகம வித்துவான்களும், பெரிய மதத்தலைவர்களும் பல வருடங்களுக்கு மேலாக வேதவாக்கியங்கள் மற்றும் வேறு குறிப்புகள் போன்ற இரண்டிலுமிருந்தும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் ஆராதனையில் வாத்தியக் கருவிகளைப் பயன்படுத்தினார்கள் என்பதற்கான எந்த குறிப்பும் இல்லையென ஒத்துக்கொண்டுள்ளனர். ஆனபடியினால் இந்த தலைவர்களில் பலர் அவர்களுடைய நாட்களிலும் மற்றும் நம்முடைய நாட்கள் வரைக்கும் தேவனை ஆராதிக்கையில் ஜனங்கள் வாத்தியக்கருவிகளைப் பயன்படுத்தவில்லை என்று தீர்மானித்தார்கள். உதாரணமாக, கத்தோலிக்க சபை இறுதியாகப் பிரிந்தது, இந்த பிரிவு தேவனைத் துதிப்பதில் வாத்தியக்கருவி இசை தங்களுடைய பாடல்களில் இடம்பெறவேண்டுமா என்ற கேள்வியைக் கொண்டுவந்தது என்பது பல காரியங்களில் ஒன்று. அந்தக் குழு இது சேர்க்கப்பட வேண்டுமென நினைத்து, ரோம கத்தோலிக்க சபையாக மாறியது, ஆகவே அவர்கள் இன்றுவரை அதை பயன்படுத்திவருகிறார்கள். இன்னொரு குழு வாத்தியக்கருவி இசையை பயன்படுத்த மறுத்து, கிரேக்க ஆர்த்தடாக்ஸ் சபை என மாறியது, அவ்வாறாக இவர்கள் இன்று வரை தங்கள் ஆராதனை வேளைகளில் அவைகளைப் பயன்படுத்துகிறதில்லை. அதற்கப்புறம், சீர்திருத்தலும் பிராட்டஸ்டண்ட் இயக்கங்களிலும், ஜான் வெஸ்லி போன்ற மனிதர்கள், தேவன் தம்முடைய பரிசுத்த வார்த்தைகளில் முன்குறிக்கப்பட்டுள்ளபடி ஆராதனைக்குரிய தேவனுடைய தெய்வீக திட்டத்தில் இப்பேர்பட்ட வாத்தியக்கருவி இசையை சேர்ப்பதற்கு தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் வாசிக்க வேண்டிய அநேக வேத வசனங்கள் உள்ளன. கர்த்தருடைய இராப்போஜனம் ஏற்படுத்தப்பட்ட பிற்பாடு கர்த்தரும், சீஷர்களும் உருவாக்கிய ஒரு கூற்றுடன் ஆரம்பிப்போம். “அவர்கள் ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினபின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்” (மத்.26:30) என வாசிக்கிறோம். பிறகு பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு கால்கள் தொழுமரத்திலே மாட்டப்பட்டு அவர்கள் உட்காவலறையிலே அடைக்கப்பட்டார்கள், இவைகளெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்ததினால் ஏற்பட்டது, இது, “நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்” (அப்.16:26) என்று சொல்லுகிறது. பவுல் கொரிந்துப்பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு “என்னத்தினாலெனில், நான் அந்நிய பாஷையிலே விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்” (2கொரி.14:14,15). என்று எழுதினார். யாக்கோபு, “உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்” (யாக்.5:13) என்றார். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சங்கீதம் பாடுவது பற்றி பல கூற்றுகள் உள்ளன. யோவான், “தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்றும் “அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியான



ஆடுகளைக் குறித்து மிகுந்த வாஞ்சையுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் அவைகளில் அன்புகூர்ந்து அவைகளைப் போஷித்தார்கள் (காண்க சங்.23) அவர்கள் எப்பொழுதும் அவைகளுக்கு முன்னாகச் சென்று வழிநடத்தினார்கள், ஒரு போதும் அவர்கள் பின்னாக இருந்துகொண்டு வழிநடத்தவில்லை. அவர்கள் எல்லா பிராணிகளின் சகல பிரச்சனைகளையும் அறிந்தவர்களாயிருந்து அவைகள் ஒவ்வொன்றினிடத்திலும் அன்பு கூர்ந்தார்கள். அவர்கள் அவைகளைப் பாதுகாத்து, போஷித்து தண்ணீரும் கொடுத்தார்கள். மேய்ப்பர்கள் ஒரு தொலைந்து போன ஆட்டை கண்டுபிடிப்பதிலும் அல்லது அவர்களுடைய மந்தைக்குத் தீங்கு ஏற்படாத வண்ணம் பாதுகாப்பதிலும் பெரும் இன்னல்களை அனுபவித்தார்கள். இவ்வகையான அலுவலர்களையே கர்த்தர் மூப்பர்களாக இருக்க வேண்டுமென்று வாஞ்சிக்கிறார். மேய்ப்பன் என்ற பெயரும், சபையிலே மூப்பர்களுக்கான மற்றெல்லா பெயர்களும் இந்த மனுஷரைக் குறித்து நமக்கு ஒரு நல்ல புரிந்துகொள்ளுதலை அளிக்கத்தக்க வகையில் உதவிக்கரமாக இருக்கின்றன. மூப்பர்கள், மூப்பராகிய சங்கத்தாராக, கண்காணிகளாக, மேற்பார்வையாளர்களாக, ஆயர்களாக மற்றும் மேய்ப்பர்களாக இருக்கிறார்கள்.

கேள்விகள்

1.மூப்பர் என்பதற்கு எத்தனை பெயர்கள் இருக்கின்றன?

2. மூப்பர் என்ற வார்த்தையின் பொருள் ---------------, ------------------

3. பவுல் எபேசுவிலிருந்து -------------, ----------------- வரவழைத்தார் என்று எபேசி.20:17 கூறுகிறது.

4.ஒவ்வொரு ---------------, -------------------- ஏற்படுத்தப்பட்டார்கள் அப்.14:23 உரைக்கிறது.

5. 1தீமோ.4:14 மூப்பரை --------------, ------------------ என்று அழைக்கிறது.

6. 1தீமோ.3:1 சொல்கிறது ----------------- விரும்புகிறவன் ஒரு ----------- -- ------------ என்று

7."கண்காணி" மற்றும் "மேற்பார்வையாளர்கள் என்ற பெயர்கள் ஒரே பணியைக் குறிப்பிடுகின்றனவா? -------------------.

8. எந்த இரண்டு வார்த்தைகள் "மேற்பார்வையாளர்" என்ற பெயரை உருவாக்குகின்றன? -------------------- -----------------.

9. எபே.4:11 மூப்பர்களை --------------- என்று அழைக்கிறது.

10. ஒரு சபையில் எத்தனை ஆயர்கள் இருக்கவேண்டும்?

## நான் யார்?



- எங்கள் வீட்டிலே சபை கூடிவந்தது.
- நான் பவுலுக்கு உடன் வேலையாள்.
- அன்பினிமித்தம் மன்றாடி எனக்கு கடிதம் எழுதினார்.
- அவருடைய சொந்தக் கையாலே எழுதினார்.
- ஒநேசிமுவை ஏற்றுக்கொள்ளும்படி எழுதினார்.
- அவன் பட்ட கடனை செலுத்தித் தீர்ப்பேன் என்றும் எனக்கு எழுதினார்
- புதியஏற்பாட்டில் தீத்துவுக்கு அடுத்த புத்தகம் பவுல் எனக்கு எழுதியது.

நம்முடைய ஆத்துமாக்களுக்கு கண்காணி என்பதை குறிப்பிடும் வகையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1பேது.2:25). கண்காணிப்பின் இடத்திலிருந்து யூதாஸ் காரியோத்து விழுந்துபோனான் (அப்.1:20) என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூப்பர்களுக்கான இந்த பெயரானது மூப்பர்கள் அவசியமாக செய்யவேண்டிய கண்காணிப்பு வேலையை வெளிப்படுத்துகிறது 1பேது.5;2 மேய்த்தல் என்னும் வேலையைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது என்று சொல்லுகிறது. மூப்பர்கள் தாமே அவசியமாக போதித்தல் மற்றும் வழிநடத்துதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டியதாயிருக்கிறது என்று சொல்ல வில்லை. ஆனால் அவர்கள் அப்படிப்பட்ட எல்லா வேலையையும் கண்காணிப்பு செய்ய வேண்டியதாயிருக்கிறது. அவர்கள் பிராந்திய சபையின் வேலையை நிச்சயமாக கண்காணிக்க அல்லது நிர்வகிக்க வேண்டும். எல்லா அமைப்புகளுக்கும் கண்காணிகள் இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறபடியால் கர்த்தருடைய சபை கண்காணிகள் அல்லது மேற்பார்வையாளர்களை உடையதாயிருக்கிறது.

**4. மேற்பார்வையாளர்கள்:** மேற்கண்டபடி, இந்தவார்த்தை சரியாக கண்காணிகள் என்பதைப்போலவே இருக்கிறது. இது இரண்டு வார்த்தைகளால் உருவாக்கப்பட்டு இருக்கிறது "மேலாக" மற்றும் "பார்". ஒரு மேற்பார்வையாளர் சபையைக் குறித்து கவனிக்கிறவராக இருக்கிறார். அவர் பிராந்திய சபையின் நலம் மற்றும் காரியங்களுக்கு மேலாக ஒரு காவலாளியாக இருக்கிறார். அப்.20:28 உரைக்கிறது "பரிசுத்த ஆவியானவர் எபேசு சபையின் மூப்பர்களை மந்தைக்கு மேலாக கண்காணிகளாக வைத்தார்" என்று அவர்கள் தங்களைக் குறித்தும், "மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருக்க வேண்டியதாயிருக்கிறது". வரப்போகிற கள்ளப்போதகர்களிடமிருந்து மந்தையை காக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பாக இருந்தது (வச.29,30). "மேற்பார்வையாளர்கள்" என்ற பெயர் கர்த்தருடைய சபையிலே மேற்பார்வை செய்யும் முக்கியமான பணி அத்தியாவசியமானது என்பதை உரைக்கிறது.

**5. ஆயர்கள் (மேய்ப்பர்கள்):** மூப்பர்களுக்கான இப்பெயரானது புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை மாத்திரம் காணப்படுகிறது (எபே.4:11). இது மேய்ப்பர் என்று பொருள்படும் மற்றொரு வார்த்தையாக இருக்கிறது இஸ்ரவேல் ஜனங்களுக்கு மேலாக இருந்த ஆவிக்குரிய தலைவர்கள் "மேய்ப்பர்கள்" (Leaders) என்று அழைக்கப்பட்டார்கள் (எரே.2:8). கர்த்தருடைய மந்தையை சிதறடித்த மற்றும் அழித்துப்போட்ட மேய்ப்பர்களுக்கு துன்பங்களும், சாபங்களும் தெரிவிக்கப்பட்டன (எரே.23:1-7). மேய்ப்பன் என்ற வார்த்தை (Pastor) மேய்க்கிறவர் அல்லது (Pasfure) மந்தை வெளி என்ற வார்த்தையைப் போன்று இருக்கிறது. இது மேலும் ஒரே மேய்ப்பன் மற்றும் ஆடுகள் என்ற பொருளையும் வெளிப்படுத்துகிறது. நாமகரண ஆயர்கள் (மேய்ப்பர்கள் - Pastors) வேதவாக்கியங்களின்படியேயான மேய்ப்பர்களில் இருந்து வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள், வேதவாக்கியங்களின்படியேயான மேய்ப்பர்கள் ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களாயிருந்தார்கள்.

**6. மேய்ப்பர்கள்** (Shepherds): அப்போஸ்தலனாகிய பேதுரு மூப்பர்களுக்கு எழுதும் பொழுது அவர்கள் மத்தியிலுள்ள மந்தையை மேய்க்க வேண்டும் என்று சொல்கிறார். பின்பு அவர் "பிரதான மேய்ப்பர் (கிறிஸ்து) வெளிப்படும் பொழுது அவர்கள் வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள்' என்று சொல்கிறார் (1பேது.5:1-4). கிறிஸ்துவாகிய பிரதான மேய்ப்பருக்குக் கீழாக பிராந்திய சபையிலே மூப்பர்கள் மேய்ப்பர்களாக இருக்கிறார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது.மூப்பர்களை மேய்ப்பர்களோடு செய்யும் இந்த ஒப்பீடு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. வேதாகம தேசங்களில் இருந்த மேய்ப்பர்கள் தங்களுடைய



வருடைய பாட்டையும் பாடி சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்” (வெளி.15:3) என்று எழுதினார். முன்பு அறிவித்தபடி வெளிப்படுத்தின விசேஷம் எவ்வாறு யோவான் பரலோகத்தில் சத்தத்தைக் கேட்டான் என்பது பற்றியும் கூறுகிறது, “...... நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப் போலிருந்தது” (வெளி.14:2) என்றான். ஆனால் தயவு செய்து கவனியுங்கள் அவன் பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தத்தையும் கேட்டான் மேலும் அவன் நான்கு மிருகங்களைக் குறித்து பேசுகிறான். “..... பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்துநாலாயிரம்பேரே...” (வெளி.4:2,3). இங்கே வெளிப்படுத்தின புத்தகம் முழுவதும், யோவான் தான் பரலோகத்தில் என்ன பார்த்தான், என்ன கேட்டான் என்பதைப் பற்றி மனிதனுக்குத் தெரியப்படுத்தும் முயற்சியில் பல எண்ணிக்கையிலான அர்த்த விசேஷபாஷையைப் பயன்படுத்துகிறான். ஆனபடியினால் அவன் பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், சுரமண்டலக்காரர் வாசிக்கிற சுரமண்டல ஓசையைப் போலவும் கேட்டான். ஆனால் பரலோகத்தில் நேரடியான, பூமிக்குரிய, வாத்திய கருவிகள் தான் இருந்தன என்பதாக அவன் அர்த்தப்படுத்தவில்லை.

சங்கீதம் பாடுவது அல்லது தேவனை ஆராதிக்கையில் நம்முடைய பாட்டுடன் வாத்தியக்கருவியின் இசையைக் கொண்டிருத்தல் போன்ற காரியத்தோடு, இது பிரமாணத்திற்கடுத்த ஒரு காரியமாகும். வேதாகமம் எங்கு பேசுகிறதோ அங்கே பேசுவோம், அது எங்கு அமைதியாயிருக்கிறதோ அங்கே அமைதியாயிருப்போம் அல்லது தேவன் சொல்லியிருக்கிறவற்றிற்குப் புறம்பாக நாம் என்ன செய்ய விரும்புகிறோமோ, அதை தொடர்ந்து செய்வோமா? வேதாகமம் கிறிஸ்து பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொண்டவராயிருக்கிறாரெனவும், ஆனபடியினால் அவர் பேசியிருக்கிறார் எனவும் கூறுகிறது. ஆகவே நாம் அவருக்கும் அவருடைய வார்த்தைக்கும் கனத்தை செலுத்தி அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதற்கு மாறாக வேறொன்றையும் செய்யக்கூடாது. ஆனபடியினால் நாம் ஆராதனையில் வாய்மொழி சங்கீதம் அல்லது பாட்டு பாடுவதற்கு மட்டும் இடமளிக்கும்படி நம்முடைய இசைக் கருவி இசையைக் கட்டுப்படுத்தவேண்டும். அதன்பின் மட்டுமே, தேவன் அதில் பிரியமாயிருப்பாரென நிச்சயமுடையவர்களாயிருக்க முடியும்.

நீங்கள் எவ்வாறு தேவனை ஆராதிக்கிறீர்கள்? இது நீங்கள் அறிய வேண்டிய காரியம். நீங்கள் கிறிஸ்தவரா? இல்லையென்றால் நீங்கள் கிறிஸ்தவராக மாற நாங்கள் விரும்புகிறோம். கிறிஸ்து, “விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.....” (மாற்.16:16) என்றார். அதன் பின் கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என வாசிக்கிறோம் (அப்.2:47) இரட்சிக்கப்பட்ட ஒரு நபராக, கர்த்தருடைய சபையில் ஒரு அங்கத்தினனாக, தேவனை ஆவியோடும் உண்மையோடும் நீங்கள் தொழுது கொள்ள முடியும் (யோவா.4:24).

**தெரிந்து கொள்ளுவோம்** மியான்மர்

**இது ஒரு காலத்தில் இந்தியாவின் ஒரு பகுதியாக விளங்கியது. இதன் முற்காலப் பெயர் பர்மா என்பதாகும். 1989–ல் தான் இந்நாடு மியான்மர் என்று பெயர் மாற்றப்பட்டது. இது ‘தங்க பக்கோடாக்களின் நாடு’ என்று வர்ணிக்கப்படுகிறது.** *- K.R.K.Ravi Asir*

**வேதாகம கேள்விகள்**

வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்

ஆம் எனில் ☑ குறியிடவும்



*தற்சோதனை பகுதி - 36*

**36. பொய்யரைப் பற்றி வேதாகம போதனை என்ன?**

1. பொய்யர் அனைவரும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------
2. பிசாசானவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசுவதே இல்லை ☐ வசன ஆதாரம் ------------------------
3. பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன் ☐ வசன ஆதாரம்------------------------------------
4. ஒருவருக்கொருவர் பொய் சொல்வது தவிர்க்க முடியாதது ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------
5. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள் ☐ வசன ஆதாரம்-
6. அனனியா சப்பீராள் பொய்சொல்ல ஒருமனப்படவில்லை ☐ வசன ஆதாரம் ---------------------------------------------------
7. நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றார் பேதுரு ☐ வசன ஆதாரம்------------------------------------------
8. பொய் சொன்ன அனனியாவுக்கு ஒன்றும் நடைபெறவில்லை ☐ வசன ஆதாரம்-------------------------------------------------------
9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக ☐ வசன ஆதாரம் ------------------------------------------------
10. பொய்யாணையிடாமல் உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்தாதே ☐ வசன - ---------------------------------------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW** *Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் -17**

**மூப்பர்களுக்கான பெயர்கள் என்னென்ன?**

**வரைகுறிப்பு**

1. **மூப்பர்கள்**
2. **திருச்சபையின் மூப்பர்கள் (மூப்பராகிய சங்கத்தார்)**
3. **கண்காணிப்பாளர்கள்**
4. **மேற்பார்வையாளர்கள்**
5. **மேய்ப்பர்கள்**
6. **ஆயர்கள்**

**கலந்துரையாடல்**

**1. மூப்பர்கள்;** கர்த்தருடைய சபையில் மூப்பர்களுக்கு ஆறு பெயர்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு முக்கியமான அர்த்தம் இருக்கிறது. ஒவ்வொரு பெயரின் அர்த்தத்தைப் படிப்பதன் மூலமாக இந்த அலுவர்களைக் குறித்து அதிகமாக அறிந்து கொள்ளமுடியும். மிகப் பொதுவான பெயர் "மூப்பர்" என்ற வார்த்தையின் பொருள் "ஒரு வயதான நபர்" என்பதாகும். இது விசுவாசத்தில் முதிர்ந்தவராயிருக்கிறவரை மற்றும் வருடங்களின்படி வயதானவரைக்குறிப்பிடுகிறது. சபையிலே மூப்பர்கள், நன்கு முதிர்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் அனுபவம் அற்றவர்களாக இருக்கக்கூடாது (1தீமோ.3:6). ஒரு மனுஷன் அவருடைய கிராமத்திலே ஒரு வயதானவராக இருக்கிறார் என்பதினாலே அவர் சபையிலே ஒரு தகுதிவாய்ந்த மூப்பராக இருப்பார் என்பதை அது குறிப்பிடுகிறதில்லை. அவர் சபையிலே மிகவும் வயதான அங்கத்தினராக இருக்கலாம், இன்னும் அவர் ஒரு ஆவிக்குரிய மூப்பராக தகுதி பெற முடியாதவராகவே இருக்கிறார். அவர் வேதவாக்கியங்களின்படியேயான மூப்பராயிராமல் அவர் பிராந்திய சபையின் முதல் அங்கத்தினாராக கூட இருக்க முடியும். பவுல் எபேசு சபையிலிருந்து மூப்பரை வரவழைத்தார் என்று வேதாகமம் கூறுகிறது (அப்.20:17). அநேகம் பட்டணங்களில் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள் (அப்.14:23). பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படி தீத்து கிரேத்தாதீவிலே விடப்பட்டார் (தீத்து1:5). "மூப்பர்கள்" என்ற பெயர் இந்த மனுஷர் வயதானவர்கள் என்பதையும், விசுவாசத்தில் அதிக முதிர்ச்சியடைந்தவர்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது. பல வருடங்களாக அவர்கள் விசுவாசம் நிறைந்தவர்களாக வந்திருக்கிறபடியால் அவர்கள் மரியாதை மிக்கவர்களாக இருக்கிறார்கள்.

**2.மூப்பராகிய சங்கத்தார்கள்:** மூப்பர்கள் என்பதைப்போன்றே அதே அர்த்தமுடைய மற்றொரு பெயர் "மூப்பராகிய சங்கத்தார்" இது "வயதானவர் என்ற பொருளுடைய மற்றொரு வார்த்தை இது வேதாகமத்தில் ஒரே ஒரு முறை காணப்படுகிறது (1தீமோ.4:14). மூப்பர் என்ற வார்த்தையை போன்றே இது அதே முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாக இருக்கிறது என்பதை மேலேயுள்ள விளக்கத்தின் மூலமாக தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

**3. கண்காணிகள்:** மூப்பர்களுக்கான மற்றொரு பெயர் "கண்காணிகள்" என்பதாகும், இது "மேற்பார்வையாளர்கள்" என்பதை குறிப்பிடுகிறது இது 1தீமோ.3:1,2; தீத்து 1:7; பிலிப்.1:1 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. இது வேறொரு இடத்தில் இயேசு